பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

21 09 2025 6 45

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மகளிரின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

2. அமெரிக்காவின் H1B விசா கட்டண உயர்வு காரணமாக ஏற்படும் தாக்கங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு பொருளாதார திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

4. தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. ஆசியக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் சூப்பர்-4 சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

<<<< >>>>

மகளிரின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

கோவையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், மத்திய அரசின் அனைத்து திட்டங்களிலும் மகளிருக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்தார். ஜன்தன் வங்கிக் கணக்கு, பிரதமரின் வீட்டு வசதி திட்டம், இலவச சமையல் எரிவாயு இணைப்பு உள்ளிட்ட அரசின் பல்வேறு திட்டங்களை அவர் பட்டியலிட்டார். சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக உணவுப் பொருட்களின் விலை பண்மடங்கு குறையும் என்று திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறினார். முன்னதாக மகளிர் தொழில்முனைவோருக்கு தையல் எந்திரம், கிரைண்டர் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை அவர் வழங்கினார். பிரதமர் திரு. நரேந்திர மோடியின் 75வது பிறந்த தினத்தை ஒட்டி அமைக்கப்பட்டுள்ள சிறப்பு ஓவியக் கண்காட்சியையும் திரு. பிரல்ஹாத் ஜோஷி பார்வையிட்டார்.

<<<< >>>>

அமெரிக்காவின் H1B விசா கட்டண உயர்வு காரணமாக ஏற்படும் தாக்கங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்தியா-அமெரிக்கா நாடுகளிடையே புதுமைக் கண்டுபிடிப்புகள் மற்றும் படைப்பாற்றல் துறையில் பரஸ்பரம் பங்களிப்பைக் கொண்டுள்ளதாகவும், எனவே

சிறந்த நடைமுறைகள் குறித்து அமெரிக்கா ஆலோசிக்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்பம், புதுமைக் கண்டுபிடிப்புகள், பொருளாதார வளர்ச்சி, போட்டித்தன்மை போன்றவற்றில் இரு நாடுகளிடையே பரஸ்பரம் திறமையான பணியாளர்கள் மகத்தான பங்களிப்பை வழங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளைக் கருத்தில் கொண்டு H1B விசா தொடர்பான கட்டுப்பாடுகள் குறித்து அந்நாடு பரிசீலனை செய்யும் என்று எதிர்பார்ப்பதாக திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

<<<< >>>>

தமிழகத்தின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு பொருளாதார திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார். விருதுநகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி இரட்டை இலக்கத்தில் உயர்ந்துள்ளதாக தெரிவித்தார். ஜி.எஸ்.டி. சீர்த்திருத்த நடவடிக்கையின் பலன்கள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்று திரு. தங்கம் தென்னரசு கூறினார்.

<<<< >>>>

தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியள்ளார்.

கோவையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், கடந்த 5 நாட்களில் 17 வன்கொடுமைச் சம்பங்கள் நடந்துள்ளதை சுட்டிக்காட்டினார்.

திமுக ஆட்சியில் சொத்து வரி, வீட்டு வரி, தொழில் வரி மற்றும் மின்சார கட்டணம் உயர்ந்துள்ளதாகவும், இதன் காரணமாக மக்களும் தொழில்முனைவோரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக திரு. நயினார் நாகேந்திரன் கூறினார்.

<<<< >>>>

விழுப்புரம் மாவட்டம் அருகே சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் நேரிட்ட சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 3 லட்சம் ரூபாய் நிதியுதவி அளிக்கப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்தவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து வழங்கப்படும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<< >>>>

நாடு முழுவதும் உள்ள பழங்குடியின மக்களின் பொருளாதார நிலையை உயர்த்தும் வகையில் மத்திய அரசின் “வன் தன்” திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள பழங்குடியின மக்களுக்கு இந்த திட்டம் பேருதவியாக இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<< >>>>

இனி, மக்களின் மனதை வென்ற மத்திய அரசின் திட்டங்கள்...

சேவை, நல்லாட்சி என்பதை தாரக மந்திரமாக கொண்டு ஓய்வின்றி பணியாற்றி வரும் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, சிறந்த நிர்வாகத்தின் மூலம் மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது.

இதுகுறித்த சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது விவசாயிகளின் நிதி பாதுகாப்பிற்கான திட்டங்கள்.

நாட்டின் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கும் விவசாயிகளுக்கு உறுதுணையாக மத்திய அரசு தொடர்ந்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மத்திய அரசு கடந்த 11 ஆண்டுகளாக விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பதற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் உறுதியுடன் உள்ளதாக கூறுகிறார் பிரதமர் திரு. நரேந்திர மோடி.

வேளாண் துறைக்கான நிதி ஒதுக்கீடும் 27 ஆயிரம் கோடி ரூபாயிலிருந்து ஒரு லட்சத்து 37 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ் 11 கோடி விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். இதற்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் வேளாண் கடன் அட்டைக்கான உச்சவரம்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இயற்கை பேரிடரால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் பயிர் காப்பீட்டு திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டங்கள் தங்களுக்கு மிகவும் பயனளிப்பதாக தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில், நாட்டின் வளர்ச்சிப் பயணம், உணவு பாதுகாப்பிலிருந்து விவசாயிகளின் வளமான வாழ்வை உறுதி செய்யும் நோக்கில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

<<<< >>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

போலந்து எல்லை அருகே யுக்ரைனின் நிலைகளைக் குறிவைத்து ரஷ்யா நடத்தி வரும் விமானப் படை தாக்குதலில் இருந்து பாதுகாக்கும் வகையில் வான் பாதுகாப்பு நடவடிக்கைகளை அந்நாட்டு அரசு மேற்கொண்டுள்ளது.

--------------

ரஷ்யாவின் சமரா பகுதியில் யுக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலில் பொதுமக்கள் 4 பேர் உயிரிழந்தனர்.

--------------

லண்டன் ஹீத்ரு, ப்ரசெல்ஸ் மற்றும் பெர்லின் விமான நிலையங்களில் நடத்தப்பட்ட சைபர் தாக்குதல் காரணமாக அதன் செயல்பாடுகள் கடுமையாக பாதிக்கப்பட்டன.

--------------

பீஹாரில் கல்வித்துறை சார்பில் மாணவர்களுக்கான உதவித் திட்டத்தின்கீழ், 2 ஆயிரத்து தொள்ளாயித்து 20 கோடி ரூபாயை அம்மாநில முதலமைச்சர் திரு. நிதிஷ்குமார் விடுவித்துள்ளார்.

--------------

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூரில் நடைபெற்ற மருத்துவ முகாமை ஆய்வு செய்த மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

--------------

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிராம நிர்வாக உதவியாளர்கள் பணியிடத்திற்கு இன்று நடைபெறுவதாக இருந்த தேர்வு, நிர்வாக காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

--------------

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொழில்முனைவோர் புத்தாக்க செயல்பாடு குறித்து உயர்கல்வி நிறுவனங்களின் உயர்மட்ட மேலாண்மைக் கூட்டம் ஆட்சியர் திருமதி அழகுமீனா தலைமையில் நடைபெற்றது.

--------------

நாமக்கல் மாவட்டம் நயினாமலை அருள்மிகு வரதராஜ பெருமாள் திருக்கோவிலுக்கு செல்வதற்கு 30 கோடி ரூபாய் செலவில் சாலை அமைக்கும் பணிகளை மாநில அமைச்சர் திரு. மதிவேந்தன் தொடங்கி வைத்தார்.

--------------

கரூர் மாவட்டம் குளித்தலை அருகே ரயில் மோதியதில் இருவர் உயிரிழந்தனர்.

--------------

தூய்மை குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் காஞ்சிபுரத்தில் தூய்மை இந்தியா இயக்கப் பேரணி நடைபெற்றது.

--------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசியக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் சூப்பர்-4 சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

துபாயில் இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

நேற்று நடைபெற்ற இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் 4 விக்கெட் வித்தியாசத்தில் பங்களாதேஷ் வெற்றி பெற்றது.

---------------

19 வயதுக்குட்பட்டோருக்கான இந்தியா-ஆஸ்திரேலியா இடையேயான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

பிரிஸ்பேனில் இப்போட்டி காலை மணி 9.30க்கு தொடங்குகிறது.

-------------

ப்ரோ கபடி லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் பட்னா - தில்லி அணியையும், ஹரியானா - தமிழக அணியையும் வென்றன.

<<<<The End>>>>